அமைதியும் நிறைந்த பொது வாழ்க்கையை அமைத்துத் தருவேன் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னார்கள். அதை இன்றைக்கு செய்துகொண்டு இருக்கிறார்கள்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் பேசி முடிக்கின்ற நேரத்திலே வருகின்ற தேர்தலிலே வெற்றி பெறுவோம் என்று சொன்னார்கள். நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் பணிவோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கடைந்த வெண்ணெய் மோர் புகாது, உடைந்துபோன சங்கின் ஓசை மீண்டும் உயிர் புகாது, உதிர்ந்த பூவும், விழுந்த காயும் மீண்டும் போய் மரம் புகாது, அதேபோல, இறந்து போன மானிடன் இனி பிறப்பதற்கு இல்லை, கீழே இறக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் வருவதற்கு வாய்ப்பே இல்லை, வாய்ப்பே இல்லை. என்றுமே தமிழகத்தில் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிதான் என்று சொல்லி, நல்லவரை நாடு நம்பும், நல்லவருக்கு வாழ்த்துரைக்கும், வல்லவரை வரவேற்கும், வாழ வழிகாட்டச் சொல்லும், நல்லவரே, வல்லவரே நாடு காக்க வந்தவரே, புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தமிழ்நாட்டிலே என்றுமே உங்கள் ஆட்சிதான், ஆட்சிதான் என்று சொல்லி வருவாய்த் துறை குறித்த மானியக் கோரிக்கையை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

10. விதி 110–ன்கீழ் அறிக்கை

காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைகளின் பணியாளர்களுக்குப் படிகளை உயர்த்தி வழங்கல் – மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்கு பதில் அளித்து 15–3–2005 அன்று இந்த அவையில்

நான் பேசும்போது நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவது காவல் துறை என்பதை தெளிவுபடத் தெரிவித்தேன். வலிமையான நாடாக இந்தியா இருக்க வேண்டும், அதில் வளம் மிக்க மாநிலமாக தமிழகம் திகழவேண்டும் என்ற இலட்சியம் ஈடேற வேண்டுமென்றால் தமிழகம் அமைதிப் பூங்காவாக விளங்க வேண்டும். எந்த வளர்ச்சிக்கும் முதல் தேவையாக இருப்பது அமைதியான சூழ்நிலைதான். அத்தகைய அமைதிச் சூழ்நிலையை உருவாக்குவதிலும், அதனைக் கட்டிக்காப்பதிலும் காவல் துறையின் பணி இன்றியமையாதது. இதன் அடிப்படையில்தான், காவல் துறையை நவீனப்படுத்தவும், காவல் பணியை மேம்படுத்தவும், காவலர்கள் நலன் பேணவும், பல்வேறு திட்டங்கள், சலுகைகள், உதவிகள் ஆகியவற்றை நான் அறிவித்தேன்.

தமிழக மக்களுக்கு அமைதியான வாழ்க்கையை உறுதி செய்திட தமிழகக் காவல் துறை 24 மணி நேரமும் ஆயத்த நிலையிலேயே இருக்கிறது. காவலர்களுக்கு வாரத்தில் 6 நாட்கள் பணி நாட்கள் என்றும், ஒரு நாள் வார விடுமுறை நாள் என்றும் உள்ள போதும், சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை, வழக்குகள் புலன் விசாரணை, வழக்குகள் தொடர்பாக நீதிமன்றங்களுக்குச் சென்று வருதல் முதலான பல்வேறு பணிகள் காரணமாக சில நேரங்களில் வார விடுமுறையை காவலர்கள் துய்க்க முடியாத நிலை உள்ளது. அவ்வாறு வார விடுமுறை நாட்களிலும் தவிர்க்க இயலாத காரணங்களால் பணி மேற்கொள்ளும் காவலர், முதல் நிலைக் காவலர் மற்றும் தலைமைக் காவலர் ஆகியோருக்கு விடுமுறை அன்று பணி செய்தமைக்கு ஈடாக வார விடுப்பு ஈட்டுப் படி வழங்கப்பட்டு வருகிறது. 50 ரூபாயாக இருந்த இந்த வார விடுப்பு ஈட்டுப் படியை நாள் ஒன்றுக்கு 100 ரூபாயாக உயர்த்தி 2002 ஆம் ஆண்டு நான் ஆணையிட்டேன். அதன்படி தற்போது இவர்கள் வார விடுப்பு ஈட்டுப் படியாக 100 ரூபாய் பெற்று வருகின்றனர்.

அவசரப் பணிகள் நிமித்தமாக வார விடுமுறை துய்க்காமல் பணியில் ஈடுபடுகின்ற காவலர்களுக்கு, நிறைவான விடுப்பு ஈட்டுப் படி வழங்கப்பட வேண்டும். எனவே, தற்போது வழங்கப்படுகின்ற வார விடுப்பு ஈட்டுப் படியை உயர்த்தி வழங்க நான் முடிவு எடுத்துள்ளேன். இதன்படி, காவல் துறையில் பணியாற்றுகின்ற காவலர், முதல் நிலைக் காவலர் மற்றும் தலைமைக் காவலர் ஆகியோருக்கு வார விடுப்பு ஈட்டுப் படியாக நாள் ஒன்றுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 100 ரூபாயை 150 ரூபாயாக உயர்த்தி வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2005 மார்ச் 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

அதேபோல, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் நிலைய அலுவலர் · நிலைக்குக்கீழ் உள்ள பணியாளர்களுக்கு வார விடுப்பு ஈட்டுப் படியாக, தற்போது நாள் ஒன்றுக்கு 100 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கும் வார விடுப்பு ஈட்டுப் படி நாள் ஒன்றுக்கு 150 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 22.06 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகும்.

காவல் துறையில் பணிபுரியும் காவலர் நிலை முதல் தலைமைக் காவலர் நிலை வரை உள்ள பணியாளர்களுக்கு மாதந்தோறும் 40 ரூபாயும், உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர் ஆகியோருக்கு 50 ரூபாயும், துணை காவல் கண்காணிப்பாளர், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மற்றும் இந்திய காவல் பணி—I.P.S.—அல்லாத காவல் கண்காணிப்பாளருக்கு 60 ரூபாயும் சீருடைப் படியாக தற்போது வழங்கப்படுகிறது. தற்போதுள்ள செலவைக் கட்டணங்களைக் கருத்தில்கொண்டு, இச்சீருடைப் படியை உயர்த்த நான் முடிவு எடுத்துள்ளேன். இதன்படி, காவல் துறையில் பணியாற்றும் காவலர் நிலை முதல் இந்திய காவல் பணி—I.P.S.—அல்லாத காவல் கண்காணிப்பாளர் நிலை வரை அனைவருக்கும் ஒரே அளவில் மாதந்தோறும் 100 ரூபாய் சீருடைப் படி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 11–10

இதேபோல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் தீயணைப்போர் முதல் கோட்ட அலுவலர் வரை உள்ள பணியாள்ர்களுக்கு அவரவர் நிலைக்கேற்ப மாதந்தோறும் 40 ரூபாய் முதல் 60 ரூபாய் வரை சீருடைப் படி வழங்கப்பட்டு வருகிறது. தீயணைப்போர் முதல் கோட்ட அலுவலர் நிலை வரையுள்ள அனைத்துப் பணியாள்ர்களுக்கும் இனி ஒரே அளவில் மாதந்தோறும் 100 ரூபாய் சீருடைப் படி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு உயர்த்தப்பட்ட விகிதத்தில் சீருடைப் ப்டி வழங்க அரசுக்கு ஆண்டொன்றுக்கு 6 கோடியே 62 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும்.

தற்போது சென்னை மாநகரம் மற்றும் தமிழகத்தின் ஏனைய பகுதிகளில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படும் காவல் துறை ஆய்வாளர் நிலை வரை உள்ள பணியாளர்களுக்கும் தீயணைப்பு மற்றும் மீட்பு அழைப்புகளின் பேரில் அப்பணிகளில் ஈடுபடும்போது,

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை நிலைய அலுவலர் நிலைக்குக் கீழுள்ள பணியாளர்களுக்கும் உணவுப் படி வழங்கப்பட்டு வருகிறது.

15–3–2005 அன்று உள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 9 ரூபாய்தான் உணவுப் படியாக வழங்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டார். இது சரியல்ல.

சென்னை நகரைப் பொறுத்தவரை காவல் துறைப் பணியாளர்களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கும் நாள் ஒன்றுக்கு 80 ரூபாய் என்ற வீதத்தில் உணவுப் படியை ஆகஸ்ட் 2002 முதல் உயர்த்தி வழங்கி நான் ஆணையிட்டேன். சென்னை நகர் அல்லாத பிற பகுதிகளில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கான உணவுப் படி கணக்கிட்டு வழங்கப்படும் முறை காவல் துறையினருக்கு வழங்கப்பட்டுவரும் முறையிலிருந்து மாறுபட்டுள்ளது. தீயணைப்புப் பணிக்குச் செல்லும் தூரம் மற்றும் தீயணைப்புப் பணியில் ஈடுபட்டுள்ள கால அளவு ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களுக்கு உணவுப் படி வழங்கப்பட்டு வருகிறது.

1992–ல் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச அளவான 9 ரூபாய் உணவுப் படியை, ஜனவரி 2002 முதல் நகராட்சி எல்லையிலிருந்து 8 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட இடங்களுக்குத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்காகச் செல்லும்போது வழங்கப்படும் உணவுப் படியை கால அளவுக்கேற்ப 25 ரூபாய் முதல் அதிகபட்சமாக நாள் ஒன்றுக்கு 50 ரூபாயாக உயர்த்தி ஆணையிட்டேன். அதேபோல், 8 கிலோ மீட்டருக்குள் உள்ள இடங்களுக்குக் கால அளவுக்கேற்ப 15 ரூபாயிலிருந்து அதிகபட்சமாக நாள் ஒன்றுக்கு 40 ரூபாயாக உயர்த்தி ஆணையிட்டேன். எனவே, 9 ரூபாய் என்றிருந்த உணவுப் படியை 2002 ஆம் ஆண்டே நான் உயர்த்தி ஆணையிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- சென்னை நகர் அல்லாத பிற பகுதிகளில் பணிபுரியும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கும் காவல் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவதைப் போலவே, பணிக்குச் செல்லும் தூரத்தையும் கால அளவையும் கணக்கில் கொள்ளாமல் உணவுப் படி வழங்க நான் தற்போது ஆணையிட்டுள்ளேன். மேலும், காவல் துறையிலும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையிலும், சென்னை அல்லாத இடங்களில் தற்போது உணவுப் படி பெற்று வரும்

2005 மார்ச் 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பணியாளர்கள் அனைவருக்கும் ஒரே அளவாக 55 ரூபாய் உணவுப் படி வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும்.

இவ்வாறு உயர்த்தப்பட்ட வார விடுப்பு ஈட்டுப் படி, சீருடைப் படி, மற்றும் உணவுப் படி ஆகியவற்றால் 87,047 காவல் துறைப் பணியாளர்களும், 6,281 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களும் பயன் பெறுவார்கள். இதனால் அரசுக்கு மொத்தம், ஆண்டு ஒன்றுக்கு, 36 கோடியே 18 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

தற்போது நான் அறிவித்துள்ள இந்தச் சலுகைகள் காவல் துறையினர் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் மேலும் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் பணியாற்ற வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்து, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

9. மானியக் கோரிக்கைகள், 2005-2006, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) **கோரிக்கை எண் 11 - வணிக வரித் துறை - முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு**

(ஆ) **கோரிக்கை எண் 29 - செய்தி மற்றும் சுற்றுலாத் துறை- எழுதுபொருள் மற்றும் அச்சு**

(இ) **கோரிக்கை எண் 36 - மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை**

(ஈ) **கோரிக்கை எண் 39 - வருவாய்த் துறை**

(உ) **கோரிக்கை எண் 49 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

(ஊ) **கோரிக்கை எண் 34 - பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை**

—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.